1989 ஏப்ரல் 27]

(ஈ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் சட்டையில்லாமல் அவைக்கு வந்துள்ளது குறித்து

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியிலே ஒரு அச்சம் இருக்கிறது. இன்றைக்கு அருமை சகோதரர் உகம்சந்த் அவர்கள் சட்டை இல்லாமலே கையிலே கட்டை போட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போல மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணாநம்பி அவர்களும் இதற்கு முன்னாலே கையிலே கட்டை போட்டு சட்டை இல்லாமல் வந்தார்கள். இதே போன்ற நிகழ்ச்சிகளை தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலே தொடர்ந்து நடத்தப்போகிறாரா ? அல்லது தடுத்து நிறுத்தப் போகிறாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அருமை நண்பர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். சொன்னார். போலீசார் அடிபட்டதாகச் சொல்கிறார்கள். அதெல்லாம் வெறும் வேஷம் என்று சொன்னார். அவ்வளவுதான்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

ஈரோடுக்கு அருகில் பெரியபளையத்தில் பேருந்துகள் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்டுள்ள உயிர் சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி, சி. கோவிந்தசாமி ஆகியோர் 13–4–89 அன்று திருப்பூரிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்தும், விஜயமங்கலத்திலிருந்து திருப்பூருக்கு வந்துகொண்டிருந்த ஒரு பேருந்தும் பெரியபாளையம் என்ற இடத்தில் மோதியதால் 15 பயணிகள் இறந்துள்ளதாலும் மேலும் சிலர் கவலைக்கிடமாக உள்ளதாலும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. ரமணி : மாண்புமிக்க தலைவர் அவர்களே. போன 13–ந் தேதி ஏற்பட்ட நெஞ்சை பிளக்கும்படியான ஒரு கோரமான விபத்து இது. 15 பேர்களுடைய உயிர் போயிருக்கிறது. ஒரு தனியார் பேருந்து திருப்பூரிலிருந்து புறப்பட்டு ஊத்துக்குளி மார்க்கமாக ஈரோடு சென்று கொண்டிருந்தது. அதே மாதிரி ஜீவா போக்குவரத்துக் கழகம் நமது அரசு பேருந்து விஜயமங்கலம் வழியாக புறப்பட்டு,